கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.08/2018** **DW: 1** **04.03.2026**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **04** நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பழனிமுத்து என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிமுத்து | வயது | 60 |
| த/க. பெயர் | முருகேசன் | தொழில் | |
| வட்டம் | | கிராமம் | அயன்பேரையூர் |
| மாவட்டம் | பெரம்பலூர் | | |

**<u>குறுக்கு விசாரணை</u>**

முருக படையாட்சியின் மகன் சுப்ரமணியன். எனக்கு முருக படையாட்சியை தெரியாது ஆனால் சுப்ரமணியனை தெரியும். சுப்ரமணியனின் தந்தை பெயர் தெரியாது. சுப்ரமணியனின் மனைவி வள்ளியம்மை. 2 வது வாதியான வேலாயுதத்தின் தந்தை பெயர் சுப்ரமணியம். வேலாயுதத்தின் மனைவி தான் 1 வது வாதி சுசிலா. வேலாயுதத்தின் சகோதரர் விவரம் எனக்கு தெரியாது. பெரியசாமி மகன் கோவிந்தராசு எனது அக்கா மகன் ஆவார். பெரியசாமி மனைவி சின்னபொண்ணு எனது அக்கா. நான் சின்னபொண்ணின் மகளை திருமணம் செய்து எனது மகளை கோவிந்தராசுக்கு கொடுத்துள்ளேன். சின்னய்யன் மகன் பெரியசாமி எனது அக்காவின் கணவர். சரோஜா சின்னபொண்ணின் சின்ன மகள். கோவிந்தராசு மற்றும் சின்னபொண்ணு முருகபடையாட்சி குமாரர் சுப்ரமணியன் மற்றும் 8 நபர்கள் மீது விருத்தாச்சலம் நீதிமன்றத்தில் ஏற்கனவே ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு திட்டக்குடி உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு மு.வ.எண்.736/1996 என கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். கோவிந்தராசின் தந்தை பெரியசாமி படையாட்சி இந்த வழக்கில் 3 வது பிரதிவாதி. வடக்கு தெருவில் பெரியசாமி பாக மனைக்கு தெற்கு, முருக படையாட்சி வீட்டிற்கு மேற்கு, சுசிலா கிரைய மனைக்கு வடக்கு, ஒருங்கை பாதைக்கு கிழக்கு என்ற சொத்தை பொறுத்து 4 வது இன சொத்தாக காட்டி மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதில் எனது சொத்திற்கும் முருக படையாட்சி சொத்திற்கும் நடுவில் கிழக்கு மேற்காக 5 அடி பாதை உள்ளது என்றால் சரிதான், அது என்னுடைய தனிப்பட்ட பாதை. பழைய வழக்கில் மேற்கில் பாதை என்று காட்டி நான் கூறியிருந்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அது பழைய வழக்கு தாக்கல் செய்த பிறகு நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் நத்தமாக

உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பாதை சர்வே எண்.166/6 ல் உள்ளது என்றால் சரிதான். சுசிலா மற்றும் வேலாயுதத்திற்கு பாத்தியமான சொத்து சர்வே எண்.166/7 ல் உள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி நான்கு சக்குபந்தியில் உள்ள சொத்து சர்வே எண்.166/6 ல் உள்ளது என்றால் சரிதான். சுசிலா கிரைய மனை என்ற சக்குபந்தியில் எனக்கோ எனது சகோதரிக்கோ உரிமை இல்லை என்றால் சரியல்ல. சுசிலா கிரைய மனை என்பது சுசிலா யாரிடம் கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சுசிலா கிரையம் கொடுத்த நபருக்கு எப்படி சொத்து பாத்தியம் என்றும் எனக்கு தெரியாது. பெரியசாமி படையாட்சி தற்போது உயிருடன் தான் உள்ளார் ஆனால் அவருக்கு மனநிலையும், உடல்நிலையும் சரியில்லை. ஆனால் அதற்கான மருத்துவ ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது எனது வக்கீலுக்கு தான் தெரியும். வழக்கு சொத்தில் எனக்கும், எனது அக்காவிற்கும் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் முதலில் சாட்சி இல்லை என்று சொல்லிவிட்டு பின்பு 5 அடி என்று கூறினார். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அந்த அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் அறிக்கையை பார்க்கவில்லை, வரைபடத்தை பார்த்துள்ளேன். அந்த அறிக்கையில் பச்சை வண்ணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து தான் வழக்கு 1வது இன சொத்து என்றால் சரிதான், அதற்கு தெற்கில் பழைய கூரை வீடு என்றால் சரிதான். அந்த பாதை ஆணையர் வரைபடத்தில் B1, B2, F1, F என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். சுசிலா கிரையம் வாங்கிய சொத்திற்கு தெற்கில் சுசிலாவின் கணவர் வேலாயுதத்திற்கு பாத்தியமான சொத்து என்றால் எனக்கு தெரியாது. எனது அக்கா தவறான சக்குபந்தி கண்டு வழக்கு தாக்கல் செய்திருக்கமாட்டார் என்றால் சரிதான். இதற்கு முன்பு தாக்கல் செய்த வழக்கில் எனது அக்கா சுசிலா கிரைய மனைக்கு வடக்கு என்று சொல்லியபோது தற்போது நான் முரண் தடை கோட்பாட்டால் உட்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் இடிந்த வீட்டிற்கு தெற்கில் ரோடு உள்ளது. வாதியின் இடிந்த வீட்டிற்கு கிழக்கில் 5 அடி பாதை. வழக்கு 3வது இன சொத்து எனக்கு மட்டும் பாத்தியமான தனிப்பாதை இல்லை என்றும், அது வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்றால் சரியல்ல. வழக்கு 1,2 இன சொத்துகளில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு 1வது இன சொத்து பிச்சையம்மாளுக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. பிச்சையம்மாள் காலமான பிறகு அவரது மகள் வள்ளியம்மைக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. வள்ளியம்மை உயிருடன் இருக்கும்போதும், சுயநினைவில் இருக்கும்போதும் 17.03.1973 அன்று தனபால் மனைவி செல்வம் அவர்களுக்கு உயில் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வள்ளியம்மை காலமான பிறகு தனபால் மனைவி செல்வம் அனுபவித்து வந்து இந்த வழக்கில் உள்ள 1வது வாதிக்கு 22.01.1993 அன்று கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஆவணத்தில் கிழக்கு மேற்கு 17.6 அடி கண்டிருந்தாலும்

பூமியில் கீழ்மேல் 18 அடி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. முன் வழக்கில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என வழக்காடி எனக்கும், எனது அக்காவுக்கும் எனது சகோதரிக்கும் உரிமை இல்லாததால் வழக்காடாமல் விட்டோம் என்றால் சரியல்ல, எனது அக்கா மிகவும் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார். 2012 ம் வருடத்தில் எனது சகோதரி உடல் நலத்துடன் தான் இருந்தார். வழக்கு 1வது இன சொத்தில் தென்வடல் 5 அடிக்கும், கீழ்மேல் 18 அடிக்கு ஆக்கிரமிப்பு செய்து கூரை அமைத்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு 1வது இன சொத்தின் மீதமுள்ள பகுதியில் விறகு அடுக்கி உரிமை கொண்டாடி வருகிறோம் என்றால் சரியல்ல. எனது சகோதரி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எவ்வாறு வழக்கு சொத்து பாத்தியமானது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு 1, 2 இன சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், வழக்கு 3 வது இன சொத்து பொதுப்பாதை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி கோரியவாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2026.03.04 16:50:47 +0530

Additional District Munsif,
Tittagudi.